முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண். 119/2010

வாதியின்/பிரதிவாதியின் ஆவது சாட்சியின் வாக்குமூலம்(1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி ) திருமதி.G.சிவகாமி , கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் அவர்களால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

-----------------------------------------------------------------------------------------------------------------------

| | |
|---|---|
| பெயர்: பாலசுப்பிரமணியன் | சாதி: |
| த/பெ.க.பெ: | மதம்: |
| கிராமம்: | தொழில்: |
| தாலுகா: | வயது: |

-----------------------------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை: 26.02.2019</u>

நான் இந்த வழக்கின் 1வது பிரதிவாதி. என் தரப்பு முதல்விசாரணையை பிரமாண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் பிரமாண வாக்கு மூலத்தை படித்து பார்த்த பின்பு தான் கையொப்பம் செய்தேன். 12.03.1920 தேதியிட்ட மைதீன் ராவுத்தர், முகம்மது அபுபக்கர் இருவருக்கும் வெங்கடாசல ஆச்சாரி எழுதி கொடுத்த கிரையப்பத்திரம் அசல் பி.சா.ஆ.1. 12.03.1920 மைதீன் ராவுத்தர், முகம்மது அபுபக்கர் இருவருக்கும் கிருஷ்ணன் ஆச்சாரி எழுதி கொடுத்த கிரையப்பத்திரம் அசல் பி.சா.ஆ.2. 12.03.1920 மைதீன் ராவுத்தர், முகம்மது அபுபக்கர் இருவருக்கும் சண்முகம் ஆச்சாரி எழுதி கொடுத்த கிரையப்பத்திரம் அசல் பி.சா.ஆ.3. 09.03.1940 தேதியிட்ட மீனாட்சி அம்மாள் முகம்மது அபுபக்கர் வகையறா எழுதி கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவக சான்றிட்ட நகல் பி.சா.ஆ.4. 09.07.1960 தேதியிட்ட அப்துல் ரசாக் எழுதி கொடுத்த ஒத்தி பத்திரத்தின் சார்பதிவக சான்றிட்ட நகல் பி.சா.ஆ.5. 09.04.2008 தேதியிட்ட எனக்கு சாகுல் ஹமீது வகையறா எழுதி கொடுத்த கிரையப்பத்திரத்தின் அசல் பி.சா.ஆ.6.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக ஒத்தி வைக்கப்படுகிறது.